**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**
**CC. No.121/2026**
**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | ராமலிங்கம் ( LW.1) |
| Father's / Husband Name | : | த/பெ.வையாபுரி |
| Village | : | சிலுவம்பட்டி |
| Taluk | : | நாமக்கல் |
| Calling | : | தலைமைக்காவலர் |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 27.07.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:**

1. நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்த போது கடந்த 07.03.2026 ம் தேதி வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சந்தியாவுடன் நான் மற்றும் முதல்நிலைக் காவலர் 775 திரு.மேகன்ராஜ் ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக கிடைத்த தகவலின் பேரில் கண்காணித்துக்கொண்டு இளநகர், மாணிக்கம்பாளையம் வழியாக சென்று 15.30 மணி சுமாருக்கு மாணிக்கம்பாளையம், சாணார்பாளையம் வெங்கடாச்சலம் என்பவர் தோட்டத்திற்கு சென்றபோது அங்குள்ள பனஞ்சாரியில் இருந்து இடுப்பில் அல்லையில் கயிறு, கத்தி, பிளாஸ்டிக் குடுவையுடன் இறங்கி வந்தவரை பிடித்து விசாரிக்கையில் தனது பெயர் வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார், சாணார்பாளையம், புள்ளாக்கவுண்டம்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் என்று கூறி தான் அரசு தான் அரசு அனுமதியின்றி பனங்கள் இறக்கிய குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

2) பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சந்தியா அவர்கள் எதிரி வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி 15.35 மணிக்கு கைது செய்தார்.

பின் எதிரி வைத்திருந்த சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் குடுவையை பார்க்க அதில் புளித்த நுரையுடன் கூடிய சுமார் 3 லிட்டர் பனங்கள் இருந்தது. அந்த நேரத்தில் அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அதனை எனது முன்னிலையிலும், முதல்நிலைக்காவலர் 775 திரு.மேகன்ராஜ் என்பவர் முன்னிலையிலும் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சந்தியா அவர்கள் 15.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றியும், உத்தரவுப்படி கைப்பற்றிய தடயங்களை சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்தார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மேற்படி எதிரியுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைக்கப்பட்டு வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையக்குற்ற எண்.29/2026 சட்டப்பிரிவு 4(1) (C ) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

3) நான் ரோந்து சென்றபோது அலைபேசியை எடுத்து சென்றேன். அந்த அலைபேசியை பயன்படுத்தி GPS உதவியுடன் புகைப்படம் எடுத்தால் சம்பவயிடம், நேரம் போன்றவை இருக்கும் என்றால் சரி. இந்த வழக்கில் அவ்வாறு புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரி. பொதுவாக கள் இறக்க செல்லும் ஒருவர் அருவாள், குடுவை, மரம் ஏறுவதற்கான உபகரணங்கள் போன்றவற்றை எடுத்து செல்வார் என்றால் சரி. எதிரியை கைது செய்யும் போது குடுவையை தவிர வேறு எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரி. குடுவையில் இருந்தது பனங்கள்ளா என்பதை கண்டறிய பகுப்பாய்வுக்கு அனுப்பப்படவில்லை. பனங்கள்ளை அழிக்க மேல் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி பெறப்பட்டதா என்றால் நினைவில்லை. சான்று பொருட்கள் அழிக்கப்பட்ட போது புகைப்படம் எடுக்கப்படவில்லை. எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை.

4) எதிரி மதியம் 03.35 மணிக்கு கைது செய்யப்பட்டார். எதிரி கைது செய்யப்பட்டது குறித்து காவல் நிலையத்திற்கு எப்போது தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. கைதியை காவல் நிலையத்தில் ஆஜர் செய்த பிறகு தான் காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பில் அது பதிவு செய்யப்படும். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும், சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், அழிக்கப்படவும் இல்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது புகைப்படம் எடுத்திருப்போம் என்றும், கைப்பற்றுதல் குறித்து வீடியோ எடுக்கப்பட்டிருக்கும் என்றும், அதேபோல் அழித்தலும் புகைக்கப்படம் எடுக்கப்பட்டிருக்கும் என்றும், பொய் வழக்கு என்பதால் மேற்படி சங்கதிகள்

செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.27 18:54:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.121/2026**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | மேகன்ராஜ் ( LW.2) |
| Father's / Husband Name | : | த/பெ. சுப்பிரமணி |
| Village | : | சிறுகிணத்துபாளையம் |
| Taluk | : | பரமத்தி வேலூர் |
| Calling | : | தலைமைக்காவலர்–775 |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 27.07.2026 தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முன் விசாரணை:**

1. நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்த போது கடந்த 07.03.2026 ம் தேதி வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சந்தியாவுடன் நான் மற்றும் முதல்நிலைக் காவலர் 1618 திரு.ராமலிங்கம் ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக கிடைத்த தகவலின் பேரில் கண்காணித்துக்கொண்டு இளநகர், மாணிக்கம்பாளையம் வழியாக சென்று 15.30 மணி சுமாருக்கு மாணிக்கம்பாளையம், சாணார்பாளையம் வெங்கடாச்சலம் என்பவர் தோட்டத்திற்கு சென்றபோது அங்குள்ள பனஞ்சாரியில் இருந்து இடுப்பில் அல்லையில் கயிறு, கத்தி, பிளாஸ்டிக் குடுவையுடன் இறங்கி வந்தவரை பிடித்து விசாரிக்கையில் தனது பெயர் வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார், சாணார்பாளையம், புள்ளாக்கவுண்டம்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் என்று கூறி தான் அரசு தான் அரசு அனுமதியின்றி பனங்கள் இறக்கிய குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

2) பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சந்தியா அவர்கள் எதிரி வெங்கடாச்சலம் த.பெ.செங்கோடநாடார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி 15.35 மணிக்கு கைது செய்தார். பின் எதிரி வைத்திருந்த சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் குடுவையை பார்க்க அதில்

புளித்த நுரையுடன் கூடிய சுமார் 3 லிட்டர் பனங்கள் இருந்தது. அந்த நேரத்தில் அந்த இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அதனை எனது முன்னிலையிலும், முதல்நிலைக் காவலர் 1618 திரு.ராமலிங்கம் என்பவர் முன்னிலையிலும் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சந்தியா அவர்கள் 15.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றியும், உத்தரவுப்படி கைப்பற்றிய தடயங்களை சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்தார். **மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மேற்படி எதிரியுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைக்கப்பட்டு வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையக்குற்ற எண்.29/2026 சட்டப்பிரிவு 4(1) (C ) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

3) நான் ரோந்து சென்றபோது அலைபேசியை எடுத்து சென்றேன். அந்த அலைபேசியை பயன்படுத்தி GPS உதவியுடன் புகைப்படம் எடுத்தால் சம்பவயிடம், நேரம் போன்றவை இருக்கும் என்றால் சரி. இந்த வழக்கில் அவ்வாறு புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் சரி. பொதுவாக கள் இறக்க செல்லும் ஒருவர் அருவாள், குடுவை, மரம் ஏறுவதற்கான உபகரணங்கள் போன்றவற்றை எடுத்து செல்வார் என்றால் சரி. எதிரியை கைது செய்யும் போது குடுவையை தவிர வேறு எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரி. குடுவையில் இருந்தது பனங்கள்ளா என்பதை கண்டறிய பகுப்பாய்வுக்கு அனுப்பப்படவில்லை. பனங்கள்ளை அழிக்க மேல் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி பெறப்பட்டதா என்றால் நினைவில்லை. சான்று பொருட்கள் அழிக்கப்பட்ட போது புகைப்படம் எடுக்கப்படவில்லை. எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை.

4) எதிரி மதியம் 03.35 மணிக்கு கைது செய்யப்பட்டார். எதிரி கைது செய்யப்பட்டது குறித்து காவல் நிலையத்திற்கு எப்போது தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. கைதியை காவல் நிலையத்தில் ஆஜர் செய்த பிறகு தான் காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பில் அது பதிவு செய்யப்படும். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும், சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், அழிக்கப்படவும் இல்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது புகைப்படம் எடுத்திருப்போம் என்றும், கைப்பற்றுதல் குறித்து வீடியோ எடுக்கப்பட்டிருக்கும் என்றும், அதேபோல் அழித்தலும் புகைக்கப்படம் எடுக்கப்பட்டிருக்கும் என்றும், பொய் வழக்கு என்பதால் மேற்படி சங்கதிகள்

செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

DINESHKUMAR SUBRAMANI

Digitally signed by DINESHKUMAR SUBRAMANI
Date: 2026.07.27 18:54:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.